**கடலூர்,தொழிலாளர் உதவி ஆணையர்(அமலாக்கம்) அவர்களின் செயல்முறைகள் ஆணை**
**பிறப்பிப்பவர்: திரு.ம.இராஜசேகரன், பி.டெக்.,**
**சுருக்கம்**

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018–19 மற்றும் 2019 – 2020 வரையிலான காலத்திற்கு தேர்வு செய்யப்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணியில் சேர்ந்துகொண்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணைகள் வழங்குதல் – உத்தரவிடப்படுகிறது.

---

செ.மு.அ/664/2020 நாள்: 19.08.2021

படிக்கப்பட்டது.

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.2387/PSD–I/2020, நாள்.28.05.2020.
2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/16386/2020–1, நாள்.29.07.2020.

------

ஆணை :

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில், தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கடலூர், தொழிலாளர் உதவி ஆணையர்(அமலாக்கம்) அலுவலகத்திற்கு இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி.எஸ்.ரேவதி, பணியில் சேர்ந்த நாளான 05.08.2020 முதல் பணிவரன்முறை செய்தும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a)(i)–ன்படியும், தமிழ்நாடு அமைச்சுப்பணியின் பொதுவிதி 32–ன் கீழ் தனியரை பணியில் சேர்ந்த நாள் முதல் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

“ The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon’ble High court of Madras/Madurai Bench of the Hon’ble High court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Service Examination – IV for the year 2018 -19 and 2019 -2020.”

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகள் விதி 23(a)(i)–ன்படியும், தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொதுவிதி 32–ன்படியும் மேற்படி பணியாளர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது. இத்தகுதிகாண் பருவ காலத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக

நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்திரவிடப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் இது தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

தொழிலாளர் உதவி ஆணையர்(அமலாக்கம்),
கடலூர். 19/8/2024

19/08/24

<u>பெறுநர்</u>

செல்வி.எஸ்.ரேவதி,
இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் உதவி ஆணையர்(அமலாக்கம்) அலுவலகம்,
கடலூர்.

<u>நகல் பணிந்தனுப்பப்படுகிறது</u>

1.தொழிலாளர் ஆணையர், சென்னை.
2.கூடுதல் தொழிலாளர் ஆணையர், சென்னை.
3. தொழிலாளர் இணை ஆணையர்–2, சென்னை.

<u>நகல்</u>

1. பணிப்பதிவேடு